முருகப்பெருமான் துணை

**மகான் ஜம்புமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.02.2024**, வெள்ளிக்கிழமை

1. அண்ணலே ஞானதேசிகனே
அறம்தனை உலகே பின்பற்ற
மண்ணுலகில் மாதரும சேவையை
மக்களிடை விதைத்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சால் திங்கள்
வரங்களென சதுர்திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 04 ம் நாள், 16.02.2024, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் ஜம்புமகரிஷி யானும்
3. யானும் துல்லிய ஆசிதனை
உலகநலம்பெற உரைப்பேன்
ஞானமருளி உலகை மீட்க
ஞானபண்டிதன் மேலான வழிபாட்டை
4. வழிபாட்டை சரவணச் சுடரேற்றி
வையகம் எங்கிலும் அருளும்
அழியாமை தரும் அரங்கமகான்
ஆற்றல் மிக்க உபதேசமுடன் வழிபாட்டை
5. வழிபாட்டை கலியுக மக்கள்
வணங்கி ஏற்று வருதலுற
தெளிவுதிடம் ஞானபலமுடன்
திருவருள் தரும் குருவருள் கூடி
6. கூடியே உலகோர் சிறப்பர்
குறைவிலா அருள்பொருள் வளம்
நாடியே தருமத்தை விட்டகலா
ஞானவான்களாகதேறியே மாற்றம்
7. மாற்றம் படைப்பர் உலகினில்
மாதவசியின் ஜீவகாருண்ய
ஆற்றலை அறிந்து உணர்ந்து
அளவிலா சேவை ஆற்றி

8. ஆற்றியே கலிவாழ் மக்கள்
அரங்கன் தருமம் காத்திட
ஆற்றல்பட தருமம் வளர்த்திட
அனைவரும் அரங்கன் மூலம்

9. மூலமாக ஞானத் தேர்வுடன்
முழுமை கண்டு சிறப்பர்
காலனை வெல்லும் சக்தி கூடி
கட்டாயம் அரங்கன் நோக்கமாக

10. ஆகவே உலகமாற்றம் புரிந்து
அகிலத்தில் ஞானத் தலைமை
மிகைபட எங்கும் நிறுவியே
மேலவர்கள் துணை குறைவிலா

11. குறைவிலா ஞான ஆட்சி
குருபரன் ஆட்சி எங்கும் உருவாகி
மறைபோற்றும் மாற்றம் நிகழும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—